1994 மார்ச் 17]

8—

திருப்பத்தூர் தொகுதியில் நூற்பு ஆலை அமைத்தல்

*22439 திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :
மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் நூற்பு ஆலை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆம் என்று சொல்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இல்லையென்று சொல்லிவிட்டார். எங்களுடைய திருப்பத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அது தொழில் வளம் இல்லாத ஒரு தொகுதி. இந்தத் திருப்பத்தூர் தொகுதியில் பருத்தி மிக அதிகமாக விளைகிறது. வாரம் ஒன்றுக்கு எங்களுடைய திருப்பதூர் தொகுதியிலிருந்து $1\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவுக்கு வெளி மாநிலங்களுக்குப் பருத்தி ஏற்றுமதி செய்யப்படுகிறது. தரமான பருத்தி கூட எங்களுடைய திருப்பத்தூர் தொகுதியில் கிடைப்பதால மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நூற்பாலையை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம் அரியலூரில் வடாற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 25,000 கதிர்களுடன் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய திருப்பத்தூர் தொகுதியில் உபரியாக பருத்தி உற்பத்தியாகுமானால குறைந்த விலையில் கூட்டுறவு நூற்பாலைக்கு அந்த வியாபாரிகளோடு பேசி தருவார்களானால் இப்போது நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற நூற்பாலை இலாபத்தில் இயங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல் விலை ஏறியிருப்பதாலும், நூல் கிடைக்காமல் தட்டுப்பாடு இருப்பதாலும் எங்களுடைய திருப்பத்தூர்

தொகுதியில் நெசவாளர் குடும்பங்கள் மிக அதிகமாக இருப்பதாலும், இந்த ஆண்டில் அல்லது அடுத்த ஆண்டிலாவது நூற்பாலையை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வடாற்காடு மாவட்டத்திலுள்ள நூற்பாலையைத் தவிர மேலும் 17 நூற்பாலைகள் இருக்கின்றன. இந்த நூற்பாலைகளில் மாதம் ஒன்றுக்கு 13.52 லட்சம் கிலோகிராம் சிட்டா நூலும், 11.52 லட்சம் கிலோகிராம் கோன் யார்ன்-கோன் நூலும் உற்பத்தி செய்து வருகிறோம். தற்போது கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான உபரி நூலைத்தான் நாம் உற்பத்தி செய்து வருகிறோம் என்பதை இந்த அவையின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

9—

வாசுதேவ நல்லூர் தொகுதி, குலசேகரப்பேரி ஏரியில் உடைப்பை அடைத்தல்

*10249— திரு. ஆர். ஈஸ்வரன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, திருமலாபுரம் கிராமம், குலசேகரப்பேரி ஏரியின் உடைப்பை அடைப்பதற்கு முன்னணை போடப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சரி செய்து மராமத்து வேலைகள் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். திருமலாபுரம் கிராமம், குலசேகரப்பேரி குளத்தில் இரண்டு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு அவை அடைக்கப்பட்டுள்ளன. தற்காலிகமாக அடைக்கப்பட்ட இடத்தில் பின் அதை நிரந்தரமாக்கும் எண்ணத்துடன் அலைகற்கள் பதிக்கப்பட்டுள்ளன. தற்போது கரை பலமாக இருப்பதால் வேறு மராமத்து பணிகள் தேவையில்லை.